பல்கலைக்கழக
வெளிவாரிப்
பரீட்சைகள் - 1992

### பரீட்சை அனுமதி அட்டை

கலை முதற் தேர்வு
வர்த்தக முதற் தேர்வு
வர்த்தகமாணி பகுதி 1
பொதுக் கலைமாணி பகுதி 1
சிறப்புக் கலைமாணி பகுதி 1

மேலே குறிக்கப்பட்ட பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டையையும், நேர அட்டவணையையும் 12 - 07 - 1993ற்கும் 16-07-1993ற்கும் இடையில் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
(சி-6989)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சமுதாய மருத்துவப் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-09-27 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்

சம்பள அளவுத்திட்டம்:
பேராசிரியர்: ரூபா 15860 6 × 390 - 18,200 - மாதமொன்றுக்கு.

குறிப்பு
1) மேற்குறித்த சம்பள அளவுத்திட்டம் 1994 சனவரி 1ம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படுமாதலினால் இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் 1993-ம் ஆண்டில் ரூபா 14030/- (மாதமொன்றுக்கு) சம

## ஈராண்டு நினைவலைகள்



### வீரவேங்கை கோமதி
[கனகலிங்கம் சுடர்ஒளி]

தாயின் மடியில்:
10-02-1971

தாயக மண்ணிற்காக
11-07-1991


அராலியூர் பெற்றெடுத்த தவச் செல்வியே
தமிழினத்தின் விடிவிற்காய் களம் காணப்-
புறப்பட்டாய் புலியானாய் சுடரே
முகிழ்ந்திட்ட பெரும் நெருப்பானாய் கோமதியே
மருத்துவப் பணி உன் களப்பசியை அடைக்கிறதா?
இல்லை- களமாடித்தமிழ்க் குலம்
காக்கப்புறப்பட்டாய் தமிழ்-
மண்ணிலே கலந்திட்டாய் மகளே
விடியலுக்கே விளைநிலமானாய்
தமிழுக்கு வித்தானாய் தமிழீழச்-
சொத்தானாய் தமிழ்வாழுமட்டும்
நின்புகழ் வாழுமம்மா.

-குடும்பத்தினர்.

89/6 ஜெயக்குமார் லேன்,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (5326)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஓம் ஓம்



### வீரவேங்கை மோகனதாஸ்
[சவரியர் கமலா மோகனதாஸ்]

காமாட்சி!

| | | | |
|---|---|---|---|
| வெல்லும் | பணியென'' | விரைந்தனை | களத்தில்! |
| தேடல்! | உன்புகழ்; | திருவுருக் | காண்கிலம் |
| பாடல் | கேட்குதுன் | படம்மனம் | நிறைக்குது; |
| மீதி | யாவுமே | தமிழினுக் | காக்கினை. |
| ''சோதி'' | நீயருட் | சோதியுட் | கலந்தனை; |
| ஆனி | நாளிது | ஆண்டிரண் | டாகினும் |
| ''வானதி''! | உன்னுயர் | நினைப்பினில் | வாழ்கிறோம். |

அன்புள்ள
அப்பா, அம்மா,
உடன்பிறப்புக்கள்.

174, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
11. 07. 1993 (5303)


ஆம்;
சாவுக்குள்
நீ ஒரு சங்கதியை வைத்திருக்கிறாய்!
ஆம்
தியாகித் தேசம்
மலராகும் என்பதை!

தமிழீழ மீட்புப் போரில் வீரச்சாவடைந்த போராளிகள், இன அழிப்புக்கு உள்ளாகிய பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.

''ஞானகிரி''
உரும்பராய் கிழக்கு
உரும்பராய். - குடும்பத்தினர்
(சி/6981)

---


# மீண்டும் காமாட்சி!




- விவசாயத்திற்குத் தேவையான மண்வெட்டி, கிருமிநாசினி தெளிகருவி மற்றும் பலவிதமான உபகரணங்களும்,
- இல்லத்தேவைக்கான கோடா, கத்தி, பூட்டு மற்றும் பலவிதமான பாவனைப் பொருள்களும

உற்பத்தி செய்யுமிடம்

**"காமாட்சி"**

கிருமிநாசினி தெளிகருவிக்கான உதிரிப்பாகங்கள் உற்பத்தியும் அவற்றிற்கான திருத்த வேலைகளும்

நடைபெறும் இடம்

**"காமாட்சி"**

சிறந்த தரம்! நிதான விலை!

உத்தரவாதத்துடன் கூடிய பொருள்களைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## காமாட்சி இரும்புத்தொழிலகம் சுன்னாகம் நீர்வேலி

காமாட்சி உற்பத்திகள் கிடைக்குமிடங்கள்:

- காமதேனு விவசாயக் கால்நடைப்பண்ணை
  வெள்ளை வீதி, சுன்னாகம்.
- செல்வா ஸ்ரோஸ்
  ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ''கலைத்தளிர்'' மரத்தளபாட நிலையம்
  பலாலி வீதி, கோண்டாவில்.
- இரும்பகம்
  அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
- உதயம் பல்பொருள் அங்காடி
  ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-6993)


---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சமுதாய மருத்துவப் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-09-27 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்: பேராசிரியர்: ரூபா 15860 6 × 390 - 18,200 - மாதமொன்றுக்கு.

குறிப்பு

1) மேற்குறித்த சம்பள அளவுத்திட்டம் 1994 சனவரி 1ம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படுமாதலினால் இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் 1993-ம் ஆண்டில் ரூபா 14030/- (மாதமொன்றுக்கு) சம்பளமாகப் பெறுவார்.

2) இதற்கு மேலதிகமாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமனான தொகையும் 1994 திசெம்பர் 31ஆந் தேதிவரை அவருக்குக் கொடுப்பனவு செய்யப்படும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் பத்திரங்களையும் இதர விபரங்களையும் ரூபா 20/- நிதிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

தபால்மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/நிதியாளர் பெயரில் ரூபா 20/-க்கான காசுக் கட்டளை / தபாற்கட்டளையுடன் 23x10 ச மீ அளவுடையதும் சுய முகவரியிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.


தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படலாம்.

குறிப்பு: ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
1993-07-06

[சி-6985]

---



## வீரவேங்கை மோகனதாஸ்

[சவரியர் கமலா மோகனதாஸ்]

காவிய உலகொன்று படைத்திட
துணிந்தவரின் பாதங்கள் தாம்
அனைத்தும் உன்தலைமேல் சுமந்த நீ
மேவிய செந்தமிழை தாய் தந்தை
கேட்கவென்றே இம் மேதினியில்
களம்புகுந்து தாவிய தோழரோடு
எதிரியின் பாசறை ஒழித்தவனே
மோகனதாஸ்! ஆண்டுகள்
இரண்டு ஆனதடா ஆறவில்லை
எம்மனது பாசமுடன் உன்
ஆத்ம சாந்திக்கு பிரார்த்தனை செய்யும்.

மயிலிட்டி,
வடக்கு.
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை மற்றும் உறவினர்
(5335)

---

## 3-ம் ஆண்டின் நினைவில்...

மலர்வு: 17 ... 07 — 1972



வீரச்சாவு: 11 — 07 — 1990

### 2-ம் லெப. சாளினி

[அருமைச்சந்திரன் நவநீலவதனா, வல்வெட்டித்துறை]

சரித்திரச் சாளரத்தில்
சாதனை நாயகியாய்
சாய்ந்துவிட்ட சாளினியே — உன்
உள்ளத்தின் உணர்வலைகள்
உதிர்ந்துவிடப் போவதில்லை — இங்கு
உதயமாகப் போகிறது.

ஈழத்தின் இளம் பூவே
இலட்சிய இத நாவே
பொங்கும் புரட்சி வாழ்வில்—உனை நாம்
பூஜித்தே நிற்போமே.

—குடும்பத்தினர்

(5337)

### சிந்தனைக்கு

திறமை பெற்ற தொழிலாளிக்கு தரும் ஊதியம், மிகையான ஊதியமாக ஒருபோதும் ஆவதில்லை.

— ஆங்கிலப் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## தொழிற் சங்கங்கள் போர்க்கொடி

வரவு - செலவு திட்டத்தின் அடிப்படையில் ஜூன் மாதம் வழங்குவதாக இருந்த சம்பள அதிகரிப்பைவழங்க அரசாங்கம் தவறிவிட்டது. அரசாங்கத்தின் இச் செயலைக் கண்டித்து அரசாங்க, தனியார் மற்றும் தோட்டத் தொழிற்துறையைச் சேர்ந்த 29 தொழிற் சங்கங்கள் போராடத் தயாராகிவருகின்றன.

தொழிற்சங்கங்களின் இம் முயற்சியானது, நியாயபூர்வமானதும், வரவேற்கத்தக்கதுமாகும். போருக்கென பெரும் தொகைப் பணத்தை - வரவு செலவுத்திட்டத்தில் 20 வீதத்திற்கு மேல் - செலவிடும் சிறிலங்கா அரசாங்கம், சம்பள உயர்வை வழங்குவதற்கு நிதிப்பற்றாக்குறை எனக் கூறும் காரணத்தை ஊழியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. மற்றும், அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்கள், சேவைகள் என்பனவற்றின் விலைகளை உயர்த்தியுள்ள நிலையில், அரசாங்கம் சம்பள அதிகரிப்பை வழங்காமல் இருப்பதென்பது ஊழியர்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும்.

இதேவேளை, இத் தொழிற்சங்க நடவடிக்கை வடக்கு, கிழக்கு ஊழியர்களைப் பொறுத்து அர்த்தமற்றதொன்றாகிவிட்ட காலமிதுவாகும். பொருளாதாரத் தடையினாலும், யுத்தத்தினால் பெரும் பாதிப்பிற்கும் உள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு ஊழியர்களின் பிரச்சினைகள் இத்தொழிற்சங்க நடவடிக்கைகளினால் தீர்க்கப்படக் கூடியவை அல்ல. இருப்பினும் இத் தொழிற்சங்கப் போராட்டம் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் விளைவு என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், இத்தொழிற்சங்க போராட்டங்கள் எந்தளவிற்கு சிறிலங்கா அரசாங்கத்தை பணிய வைத்து, சம்பள அதிகரிப்பை உடன் வழங்குவதற்கு உதவும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், இன்று தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களில் 29 தொழிற்சங்கங்கள்போராடத் தயாராகி இருக்கலாம், ஆனால், இத் தொழிற் சங்கங்களின் அரசியல் பலம் எந்தளவு என்பதே சர்ச்சையாகும்.

இவ்வாறானதொரு கேள்வி எழுவதற்கு, தொழிற்சங்கங்களின் இன்றைய அவல நிலையே காரணமாகும். இன்று தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களில்...

## ஜ.ஐ.தே.மு. குழுவினர் பிரதமருடன் சந்திப்பு

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற வேட்பாளர்களின் குழுவொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், கடுவெலத் தொகுதி அமைப்பாளருமான நிமல் அசோகா தலைமையிலான குழுவினர் பிரதமரை சந்தித்து மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து செயற்பட விருப்புவதாகவும், அரசுக்கு ஆதரவு அளிப்பதாகவும் கூறியுள்ளனர்.

அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் ஜ. ஐ. தே.மு. தலைவர் லலித் அத்துலத்முதலியின் மரணத்திற்குப் பின்னர் கட்சிக்கு தெளிவான பார்வையும், செயல் திட்டமும் இல்லாமற் போய்விட்டதாக குறிப்பிட்டார்.

## ஹேமாவின் பாதுகாப்பிற்கு 51 பொலிசாருடன் 4வாகனம்

திருமதி ஹேமா பிரேமதாசாவின் பாதுகாப்பிற்கென உயர் அதிகாரி உட்பட 51 பொலிசாரைக் கொண்ட அணியும், நான்கு வாகனங்களும் அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரி போவத்த தலைமையில் இந்த பொலிசாரின் அணி செயற்படவுள்ளது.

இதேவேளை பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது திருமதி ஹேமாவின் பாதுகாப்பிற்கென 135 பொலிசாரும், 22 வாகனங்களும் வழங்கப்பட்டு இருந்தது தெரிந்ததே.

குவைத் தூதுவரகத்தில்

## மாதாந்தம் 1000 பெண்கள் அடைக்கலம் கோருகின்றனர்

குவைத்தில் இருக்கும் சிறிலங்கா தூதுவரகத்தில்மாதாந்தம் சுமார் ஆயிரம் பணிப் பெண்கள் அடைக்கலம் கோருவதாகக் கூறப்படுகிறது.

அரபு முதலாளிமார்களால் தொல்லைக்கு உட்படுத்தப் படுவதாகக் கூறியே இந்தப் பணிப்பெண்கள் தூதுவரகத்திற்கு வருவதாகவும், நாளாந்தம் சுமார் முப்பது பெண்கள் இவ்வாறு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் வரையிலான செலவுகளைச் சமாளிப்பதிலும், இவர்களது புகார்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வதிலும், குவைத்திலுள்ள தூதுவரகம் பெரும் சிரமங்களை சந்தித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

### மகா கும்பாபிஷேகம்

கொழும்புத்துறை நெடுங்குளம் அருள்மிகு ஸ்ரீ அம்பலவாணர் விக்கினேஸ்வர ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று காலை 8.45 மணி முதல் 9.15 மணிவரையுள்ள சுபவேளையில்நடைபெறும்(24

# பொலிசாரின் முறைகேடுகள்; ஜனாதிபதியிடம் கூறுவேன்

### - ஹட்சன் சமரசிங்க

(கொழும்பு)

பொலிசாரின் முறைகேடுகள் தொடர்பாக ஜனாதிபதியின் தலையீட்டை கோரப் போவதாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான ஹட்சன் சமரசிங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பொலிசார் தமக்கான பாதுகாப்புஏற்பாடுகளை குறைத்து இருப்பதாகவும் போதைப் பொருள்வர்த்தகத்துடன்தொடர்புடைய பலர் சுதந்திரமாக நடமாட பொலிசார் அனுமதித்திருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். இவை தொடர்பாக ஜனாதிபதியின் தலையீட்டைக் கோரப்போவதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளை இதே போக்கிலேயேசெயற்பட அனுமதித்தால் தலைநகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விரும்பத்தகாத சக்திகளின் தலைமறைவு செயல்களுக்கு பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள் உடந்தையாக இருந்ததாகவும். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை பொலிசார் தவறாக வழிநடத்தியதாகவும் தான் பாராளுமன்றத்தில் கூறியதை தொடர்ந்து 36 மணி நேரத்தினுள் தனது பாதுகாப்பு ஏற்பாடு தளர்த்தப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிரதமர் ரணில் விரைவில் அலரி மாளிகை செல்வார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோக பூர்வ இல்லமான அலரி மாளிகையில் விரைவில் குடியேற இருக்கின்றார். ஜனாதிபதி விஜபதுங்க ஜனாதிபதி மாளிகையில் குடியமர்ந்திருப்பதை தொடர்ந்து பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் ரணில் குடியேற இருக்கின்றார்.

## மூளைக்காய்ச்சல் நோய் ஐம்பதுபேர் பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் மூளைக்காய்ச்சல் நோய் மீண்டும் தீவிரமடைந்து வருகிறது. இந் நோயினால் பீடிக்கப்பட்டோர் பலர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக ஐம்பதிற்கும் மேற்பட்டோர் இந் நோய்க்கு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கொற்றாவத்தையைச் சேர்ந்த நடராசா என்ற குடும்பத்தில் மூவர் இந் நோய்க்கு இலக்காகியுள்ளனர். தாய், தகப்பன், மகன் ஆகியோர் இந் நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [யோ]

## நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இப் பிரதேசத்தில் தினசரி சுமார் மூன்று பேர் வரையில் நாய்களால் கடியுண்டு பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (86)

## கத்திக்குத்தில் ஒருவர் காயம்

(தென்மராட்சி)

கள்ளுத் தவறணையில் ஏற்பட்ட வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிவுற்றது.

அண்மையில் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியிலுள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கத்திக்குத்தில் முடிவுற்றதாகவும் கூறப்படுகிறது. காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச் சம்பவம் பற்றி சாவகச்சேரி காவல் துணைவினர். விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(86)

# நேர்மையான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை

### -ராஜீவ் கொலை வழக்கில் சட்டத்தரணி

[சென்னை]

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்,பிரபாகரன் மற்றும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொட்டு அம்மான் அகிலா ஆகியோர் தீட்டிய சதியே இக்கொலைக்குக் காரணம் என்பது சி. பி. ஐயின் கற்பனையே. ராஜீவ் கொல்லப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அவரு...

இவ்வழக்கை சி. பி. ஐ திறந்த மனதோடு விசாரிக்கவில்லை. ராஜீவ் கொலை நடந்த மறுநாளே இது புலிகள் செயல் என்ற முடிவுக்கு சி.பி. ஐ வந்துவிட்டது. இது மிகப் பெரிய தவறு. ஈ. பி. ஆர். எல். எவ் என்ற போராளி இயக்கமும் இருக்கிறது அதன் தலைவர் வரதராஜப்பெருமாள்...

...வாதாடினார்.

ராமதாஸ் தனது வாதத்தை தொடக்கியபோதே ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவதைவிட ஒரு குற்றவாளி தப்பிச்செல்வது மேலானது என்று கூறித் தொடக்கினார்.

இந்த வழக்கில் விசாரணை அதிகாரிகள் ஏற்படுத்தியுள்ள ஒரு கருமேகத்தைச் சோடியம்...

முதல்வர் ஜெயலலிதாவை

## பதவி நீக்கக் கோரும் மனு இனியும் காலதாமதமாகாது

### தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி

(சென்னை)

தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதா தவறு இழைத்ததாகக் கூறி அவரை சட்டப்பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கக்கோரும் மனுமீது சட்டவல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இருப்பதாக தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி கூறியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும்... குறிப்பிட்டார்.

அத்துடன் அரசியலமைப் பின்படி மாநில ஆட்சித் தலைவர் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அதே போன்று தான்நடந்து கொள்ளப்போவதாகவும் தெரிவித்தார்.

தமிழக ஆளுநராக பதவிப் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக புதுடில்லிசென்ற அவர் குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், பிரதமர். உள்துறை அமைச்சர் உட்பட பலரையும் சந்தித்து...

மற்றதொன்றாகிவிட்ட காலமிதுவாகும். பொருளாதாரத் தடையினாலும், யுத்தத்தினால் பெரும் பாதிப்பிற்கும் உள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு ஊழியர்களின் பிரச்சினைகள் இத்தொழிற்சங்க நடவடிக்கைகளினால் தீர்க்கப்படக் கூடியவை அல்ல. இருப்பினும் இத்தொழிற்சங்கப் போராட்டம் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் விளைவு என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், இத்தொழிற்சங்க போராட்டங்கள் எந்தளவிற்கு சிறிலங்கா அரசாங்கத்தை பணிய வைத்து, சம்பள அதிகரிப்பை உடன் வழங்குவதற்கு உதவும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், இன்று தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களில் 29 தொழிற்சங்கங்கள்போராடத் தயாராகி இருக்கலாம், ஆனால், இத்தொழிற்சங்கங்களின் அரசியல் பலம் எந்தளவு என்பதே சர்ச்சையாகும்.

இவ்வாறானதொரு கேள்வி எழுவதற்கு, தொழிற்சங்கங்களின் இன்றைய அவல நிலையே காரணமாகும். இன்று தென்னிலங்கையில் உள்ள தொழிந்சங்கங்களில் பெரிய தொழிற்சங்கங்கள் அரசாங்க கட்சியின் தொழிற்சங்கங்களே. அல்லது அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் தொண்டமான் போன்றோரின் தொழிற்சங்கங்களே. இந்நிலையில் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும், தொழிலாளர் எண்ணிக்கை அதிகமாகவுள்ள தொழிற்சங்கங்கள், போராட்டத்தில் குதிக்காது விடுமானால் அரசிற்கு பெரும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை.

சிறிலங்காவில் இருந்த சுதந்திர தொழிற்சங்கங்களின் பலத்தை முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா போன்றவர்கள் திட்டமிட்டே நசுக்கிவிட்டனர். ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கையில் ஜனநாயக ரீதியான அமைப்புக்களை திட்டமிட்டு நசுக்கியவையே முக்கியமானவையாகும். இதன் பிரகாரமே முக்கிய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட, எதிர்க்கட்சிகள் பலவீனப்படுத்தப்பட்டன. சிதைக்கப்பட்டன. அதேபோன்றே தொழிற்சங்கங்களும் பலவீனப்படுத்தப்பட்டன. தமது ஆட்சிக் காலத்தில் பெரும் பகுதியை அவசர காலச்சட்டத்தின் கீழ் நடத்திய முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும், ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்குப் பெருமளவு முற்றுப் புள்ளி வைத்தனர் என்றால் மிகையில்லை.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரின் இவ் ஒடுக்குமுறை நடவடிக்கைகளின் பின் எஞ்சியிருந்தவை அரசியற் கட்சிகளின் கிளைகள் போன்றிருந்த தொழிற்சங்க அமைப்புக்களே ஒழிய, பூரண சுதந்திரம் பெற்ற அமைப்புக்கள் இருக்கவில்லை. எஞ்சிய அமைப்புக்களும் மிகவும் பலவீனமான நிலையில், போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லப் பலமற்றவையாகபெரும் அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடிய சக்தி அற்றவையாகவே இருந்தன.

இந்நிலையில், அரசிற்கெதிரான இப்புதிய போராட்டம் எந்தளவிற்கு அரசிற்கு அழுத்தத்தைக் கொடுக்கும், அரசாங்கம் எந்தளவிற்குப் பணிந்து வரும் என்பன சந்தேகமானதே.

ஆனால், பலவீன நிலையானாலும் அரசின் நடவடிக்கைக்கு எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டியது தொழிற்சங்கங்களின் கடமையாகும். அவ்வாறானதொரு நிலை உருவாகும் பட்சத்தில் தான் அரசின் இவ் ஏமாற்றும் நடவடிக்கைகளை மக்கள் ஓரளவாவது புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

(86) ... கொண்டு வருகின்றனர். (86)

# நேர்மையான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை

## -ராஜீவ் கொலை வழக்கில் சட்டத்தரணி

[சென்னை]

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர், பிரபாகரன் மற்றும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொட்டு அம்மான் அகிலா ஆகியோர் தீட்டிய சதியே இக்கொலைக்குக் காரணம் என்பது சி. பி. ஐயின் கற்பனையே. ராஜீவ் கொல்லப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அவருடன் புலிகள் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். தமிழீழம் என்ற கோரிக்கை பற்றி நடந்த பேச்சுவார்த்தையில் ஏறக்குறைய உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இது பற்றி வெளியான அறிக்கைகள் இதைத் தெளிவுபடுத்துகின்றன. நிலைமை அப்படியிருக்கையில், புலிகள்தான் ராஜீவைக் கொன்றனர் என்பது சரியானதல்ல.

இவ்வாறு ராஜீவ் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட கைதிகளின் வழக்கறிஞர் ராமதாஸ் வாதாடினார்.

இந்தவிசாரணை பூந்தமல்லியில் உள்ள விசேட நீதிமன்றத்தில் நடந்தபோது விக்கி செல்வலட்சுமி உட்பட 6 கைதிகளின் விடுதலை மனுக்கள் மீது வழக்கறிஞர் ராமதாஸ் வாதாடினார்.

இவ்வழக்கை சி. பி. ஐ திறந்த மனதோடு விசாரிக்கவில்லை. ராஜீவ் கொலை நடந்த மறுநாளே இது புலிகள் செயல் என்ற முடிவுக்கு சி.பி.ஐ வந்துவிட்டது. இது மிகப் பெரிய தவறு. ஈ. பி. ஆர். எல். எவ் என்ற போராளி இயக்கமும் இருக்கிறது அதன் தலைவர் வரதராஜப்பெருமாள் நம்மிடம் இருக்கிறார். சி. பி. ஐ ஏன் அதன்மீது சந்தேகப் பார்வையைச் செலுத்தவில்லை என்று ராமதாஸ் வாதாடினார்.

ராமதாஸ் தனது வாதத்தை தொடக்கியபோதே ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவதைவிட ஒரு குற்றவாளி தப்பிச்செல்வது மேலானது என்று கூறித் தொடக்கினார்.

இந்த வழக்கில் விசாரணை அதிகாரிகள் ஏற்படுத்தியுள்ள ஒரு கருமேகத்தைச் சோடியம் உப்புத் தூவி கலைத்து மக்கள் மத்தியில் உண்மையைத் தெரிவிக்க நான் முயற்சிக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அமெரிக்காவில் மோசமான மனித உரிமை மீறல்கள்

## சர்வதேச மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

அமெரிக்க அரசு மனித உரிமை மீறல்களில் பெருமளவில் ஈடுபடுவதாக சர்வதேச மன்னிப்பு ஸ்தாபனம்குற்றஞ் சாட்டியுள்ளது.

அகில உலகிலுமுள்ள 161 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சித்திரவதை, சிறைவைப்பு, பொலிசாரின் பலாத்காரப் பிரயோகம் என்பவற்றில் அமெரிக்கா மிக மோசமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

1977இல் மரணதண்டனை வழங்கப்படுவது மீண்டும் புதுப்பிக்கப்பட்ட பின்னர், கடந்த ஆண்டில் மட்டும் 31 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப் பட்டதாகவும் கூறியுள்ளது. இவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டவர்களில் 17 வயது மாணவனும் ஒருவராவார் என்றும் அவ் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. 2600க்கும் அதிகமான கைதிகளுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப் பட்டிருப்பதாகவும் அவ் அறிக்கை மேலும் எடுத்துக் காட்டியிருக்கின்றது.

# புலிகளுக்குத் தகவலா? விபரத்தை வெளியிடுக!

## – கருணாநிதி சவால்

(சென்னை)

அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ தகவல்களை புலிகள் இயக்கத்திற்கு வழங்கியதனால்தான் 1991ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்ததாக முன்னாள் பிரதமர் சந்திரசேகர் சென்னையில் கூறியிருக்கின்றார். அவ்வாறு நான் புலிகள் இயக்கத்திற்கு தகவல்களை வழங்கியிருந்தேன் என்றால் அந்த விபரங்களை அவர் வெளியிடட்டும் பார்க்கலாம்.

இவ்வாறு தி.மு.க தலைவர் மு கருணாநிதிசந்திரசேகருக்கு சவால் விடுத்திருக்கிறார்.

தமிழ்நாட்டை வன்முறையிலிருந்து விடுவிப்பதற்கான விவகாரங்கள்தொடர்பாகவும் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகவுமே நான் முதலமைச்சர் என்ற வகையில் டில்லியில் ஆராய்ந்தேன் இதை நிரூபிக்கச் சான்றுகள் உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

# இரகசிய உடன்பாடா? தி. மு. க. மறுப்பு

தி. மு. க. - அ. தி. மு க. விடையே இரகசிய உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியிருப்பதை தி. மு. க. துணைப் பொதுச்செயலர் ஆற்காடு வீராசாமி மறுத்துள்ளார்.

தி. மு. கவுடன் உறவு வைக்க காங்கிரஸ் முயற்சித்தது. அது இயலாது என கருணாநிதி அறிவித்ததையடுத்து ஏற்பட்ட ஆத்திரத்தின் விளைவே இத்தகைய புரளியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புட்டபர்த்தி சம்பவத்திற்கு பொறாமையே காரணம்

## பாபா விளக்கம்

நான்கு மாணவர்கள் பலியாவதற்குக் காரணமாக இருந்த சம்பவத்திற்குப் பொறாமையே காரணம் என்று சத்ய சாயிபாபா கூறியுள்ளார்.

புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் கடந்த ஜூன் 6 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்திற்குப் பின் நீண்ட நாட்களாக மௌனத்தைக் கடைப்பிடித்த சாயிபாபா, தனது மௌனத்தைக் கலைத்து பக்தர்கள் மத்தியில் உரை நிகழ்த்தும்போதுமேலும்கூறுகையில்:

தனது அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளில் காழ்ப்புக்கொண்டவர்கள் காரணமாகவே ஜூன் ஆறாம் திகதிய தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்றும், சத்ய சாயிபாபா மத்திய நிதியத்தின் சில உறுப்பினர்கள் அதிகார ஆசையினால் இடம் பெற்றது என்று கூறப்படுவது தவறு என்றும் தெரிவித்தார்.

அத்துடன் நான்ஒருவருக்கும் தீங்கிழைக்கவில்லை. அதனால் எனக்கும் எவருமே தீங்கிழைக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

# ஜெயலலிதா அரசைகலைக்க தி.மு.க.ஆதரவு தெரிவித்தது

தமிழ்நாட்டில் ஜெயலலிதா அரசைக் கலைக்க மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாக தி.மு.க முன்னர் தெரிவித்திருந்தது என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

தி.மு.க தலைவர் மு.கருணாநிதியின் சிறப்பு தூதுவராக தி.மு.கவின் செய்தித்தொடர்பாளர் ஆலடி அருணா சில வாரங்களுக்கு முன்னர் தன்னைச் சந்தித்து தமிழகத்தில் அடுத்து ஆட்சிக்கு வருவது யார் என்பதைப் பற்றிய கவலையில்லாமல் ஜெயலலிதாவின் அரசு கலைக்கப்பட தி. மு. கவின் ஆதரவைத் தெரிவிப்பதாகக் கூறியிருந்தார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

முதல்வர் ஜெயலலிதாவை

# பதவி நீக்கக் கோரும் மனு இனியும் காலதாமதமாகாது

## தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி

(சென்னை)

தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதா தவறு இழைத்ததாகக் கூறி அவரை சட்ட பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கக்கோரும் மனுமீது சட்டவல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இருப்பதாக தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி கூறியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; இந்த மனுக்கள் மீதான நடவடிக்கை தொடர்பாக தான் காலதாமதம் செய்யப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசியலமைப் பின்படி மாநில ஆட்சித் தலைவர் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அதே போன்று தான்நடந்துகொள்ளப்போவதாகவும் தெரிவித்தார்.

தமிழக ஆளுநராக பதவிப் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக புதுடில்லிசென்ற அவர் குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உட்பட பலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியது தெரிந்ததே

## நம்பிக்கையில்லா தீர்மானம்

நிகழ இருக்கும் மழைக் காலப் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மனம் ஒன்றைக் கொண்டுவருவது என்று தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது.

## இராஜதந்திரி மீது தாக்குதல்

[வியன்னா]

சிறிலங்காஇராஜதந்திரி ஒருவர் வியன்னாவில் நாஜிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். பெர்னாட் குணதிலக என்னும் இந்த இராஜதந்திரி இரவு நேரச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தமது விடுதிக்குத் திரும்பும் சமயத்தில் நாஜிகளால் இடைமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார். அது பயங்கரமான அனுபவமென்று வர்ணித்தஅந்த இராஜதந்திரி, இது ஒரு தனிப்பட்ட உதிரியான சம்பவம் என்று ஒதுக்கப்பட்டுவிடும் என்பதால் தான் இதுபற்றி பொலிசாரிடம் முறையிடவில்லை எனவும் கூறியுள்ளார்.

# சென்னை குடிநீர் பிரச்சினை தி.மு.க. மறியல் போர்

## 2500 மேற்பட்டோர் கைது

(சென்னை)

சென்னையில் நிகழும் கடும் குடிநீர்ப் பஞ்சத்தை அரசின் கவனத்துக்குக் கொண்டு வரும் வகையிலும், இப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணக் கோரியும் தி.மு.க தலைமையிலான தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகள் நேற்றுச் சென்னை நகரில் வீதிமறியல் போராட்டம் நடத்தினர்.

சென்னைப் புறநகர்ப் பகுதியிலும், சைதாப்பேட்டையிலும் போராட்டத்தில் கலந்து கொண்ட 2500 க்கும் மேற்பட்ட கட்சித் தொண்டர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

தி.மு.க சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ. செல்வராஜ். பரிதி இளம்வழுதி உட்பட தி.மு.க. மார்க்சீயக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

அதேவேளை தண்ணீர்ப் பிரச்சினையை மாநில அரசின் கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் வரும் திட்கட்கிழமை காங்கிரஸ் கட்சி கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளது. அப்பொழுது ஏதாவது வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டால் அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. தான் அதற்கு முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிச் செய்தித் தொடர்பாளர் கிள்ளிவளவன் கூறியுள்ளார்.

# வடமராட்சியில் குளங்கள் புனரமைக்கத் திட்டம்

[வடமராட்சி]

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பொருண்மிய மேம்பாட்டுக் கழக திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஐந்து கிராமசேவை அலுவலர் பிரிவில் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

வல்லிபுரம், புலோலிதெற்கு, புலோலி கிழக்கு, புலோலிவடமேற்கு, கெருடாவில் கிராம சேவை அலுவலர் பிரிவில் உள்ள குளங்கள் நாளை 12ஆம் திகதிமுதல் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து மற்றைய பிரிவுகளிலும் புனரமைப்பு வேலைகள் இடம்பெறும்.

இதற்கான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று கடந்த புதன்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, திட்டப் பணிப்பாளர் திரு. சுவாமிநாதன், வடமராட்சி அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு.பா. பைந்தமிழன். பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (யோ)

# ஆலங்கேணிகரையில் ஒருவர் மாரடைப்பால் மரணம்

[யாழ்ப்பாணம்]

கிளாலியிலிருந்து படகு மூலம் ஆலங்கேணியைச் சென்றடைந்த ஒருவர் சிறிது நேரத்தில் மாரடைப்பால் மரணமானார். நேற்று மூன்தினம் நள்ளிரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் புவனேஸ்வரன் [வயது55] என்பவரே மரணமடைந்தவராவார். இவர் தனது மனைவியுடன் கொழும்பு செல்வதற்காக கிளாலியூடாக படகு மூலம் ஆலங்கேணியை சென்றடைந்தார் எனவும் படகை விட்டு இறங்கி சிறிது தூரம் சென்றபோது மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

# ஹேமா ஆலய பிரவேசம் குமார் ஆவேசம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸா காலமாகி எட்டாம் நாள் அவரின் மனைவி ஹேமா பிரேமதாஸா கொழும்பு இந்து ஆலயம் ஒன்றில் பிரவேசிக்க அனுமதிக்கப் பட்டது குறித்து குமார் பொன்னம்பலம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இந்துக்கள் வீட்டில் மரணம் சம்பவித்தால் உறவினர்கள் 31 நாள்களுக்கு ஆலயத்துக்குள் சென்று வழிபட அனுமதிக்கப் படுவதில்லை. வழககம் இவ்வாறிருக்க ஹேமா ஆலயத்துக்குள் சென்று வழிபட எவ்வாறு அனுமதிக்கப் பட்டார் என்று குமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.


## தவறி விட்டது

புலோப்பளை படகு சேவை இறங்கு துறையிலிருந்து நேற்று ஒரு கடதாசிப்பெட்டி தவறிவிட்டது. அதில் இஞ்சினியரிங் புத்தகங்களும், வீட்டுப் பொருள்களும் மருந்து வகைகளும் உள்ளன கண்டெடுத்தவர்கள் கீழ்கண்டவிலாசத்தில் தொடர்பு கொள்ளவும், சன்மானம் வழங்கப்படும்

இ. ஞானசிங்கம்
யூறோவீல் ஸ்தாபனம்,
449, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[5944]


## அடுத்த மாதம் சீட்டிழுப்பு

கொக்குவில்இளைஞர் சங்கம் மனோன்மணி சனசமூகநிலைய பாலர் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டுகள் 01-08-93 ஞாயிற்றுக்கிழமையே அதிர்ஷ்டம் பார்க்கப் படும் என சங்க நிர்வாகிகள் அறிவிக்கின்றனர்.

## அவசர சிகிச்சை

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் ஒருவன் அவசர சிகிச்சை ஒன்றுக்காக பலாலியிலிருந்து விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப் பட்டார்.

அல்லாரை தெற்கு மீசாலையைச் சேர்ந்த கனகரட்ணம் குமுதன் (வயது 7) என்ற சிறுவனே கொழும்புக்கு எடுத்துச் செல்லப் பட்டவராவர். இவர் நரம்புத் தளர்ச்சி நோயினால் பீடிக்கப் பட்டவராவர். (யோ)

## விளையாட்டுப் போட்டிகள்

யாழ். மாநகரசபையின் கீழ் இயங்கி வரும் சனசமூக நிலையங்களிடையே 1993 ஆம் ஆண்டிற்குரிய விளையாட்டுப் போட்டியை நடாத்த சனசமூக நிலையங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எறிபந்தாட்டம், கரப் பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், தாச்சி, எல்லே போன்ற விளையாட்டுக்கள் நடாத்தப் பட உள்ளன. வலைப்பந் தாட்டம் பெண்களுக்கு மட்டும் நடாத்தப்பட உள்ளது.

## புத்தக கண்காட்சி

[வடமராட்சி]

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடாத்தும் 8ஆவது ஸ்ரீராம கிருஷ்ண விவேகானந்த "புத்தகக் கண்காட்சி" எதிர்வரும் வெள்ளிக்கிழமை 16ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலையில் கலாசாலை அதிபர் திரு ஆர். எஸ் நடராசா இக் கண்காட்சியை திறந்து வைப்பார்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்வினையடுத்து ஏற்பாடு செய்

# அரச பயங்கரவாதத்திற்கு ஜி-7 நாடுகள் எச்சரிக்கை

(டோக்கியோ)

'பயங்கரவாதத்துக்கு' ஆதரவளிக்கும் நாடுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று டோக்கியோவில் நடைபெறும் ஏழு தொழில் வள நாடுகளின் உச்சி மாநாடு எச்சரித்துள்ளது.

டோக்கியோவில் நேற்று நடந்த உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்று இவ்வாறு கூறுகிறது.

அரசின் ஆதரவில் நடைபெறும் பயங்கரவாத செயல்கள் பெருத்த அபாயத்தைத் தோற்றுவிப்பதாக உச்சிமாநாடு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. உலகெங்கிலும் அரச ஆதரவில் நடைபெறும் பயங்கரவாதத்தால் பெருகி வரும் அபாயம் குறித்தும், சர்வதேச மட்டத்திலான அதன் தொடர்புகள் பற்றியும் உச்சி மாநாட்டுத் தலைவர்கள் ஆலோசித்ததாய் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐ.தே க.விற்கு செல்ல நெவில் முயற்சி

சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. நெவில் பெனாண்டோ தனது பழைய கட்சியான ஐ தே. கட்சிக்கு மீண்டும் செல்வதற்கு முயற்சித்து வருகிறார்.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாகவே கட்சி மாறும் சட்திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் கபடநாடகத்தை முன்நின்று நடத்திவருவதாக சிறிமாவோ பண்டாரநாயக்கா அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். டி. திலக

## கல்விக்

## ராஜீவ்காந்தி கொலை வழக்கு

# வக்கீல்களின் வாதம்; கைதிகள் கைதட்டி ஆரவாரம்

[சென்னை]

பூந்தமல்லி விஷேட நீதி மன்றத்தில் இடம்பெற்ற ராஜீவ் கொலை வழக்கு விசாரணையின்போது சி. பி. ஐ. வழக்கறிஞருக்கும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கும் ஏற்பட்ட வாதங்களை பார்த்துக் கொண்டிருந்த கைதிகள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ராம்தாஸ் தனது வாதத்தை 'ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவதை விட ஒரு குற்றவாளி தப்பிச்செல்வது மேலானது' என்று கூறி துவக்கினார். ஆரம்பமே மேடைப்பேச்சு போல் இருக்கிறது என்று சி.பி.ஐ. தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் டி ஐ ஜி.பி மோகன் தாஸ் ஓர்ஆங்கிலபத்திரிகைக்கு அளித்துள்ளபேட்டியை சுட்டிக் காட்டி "பெல்ட் வெடிகுண்டு சதித்திட்டத்தையே" பொய் என்று ராம்தாஸ் வாதாடினார். அப்போது சி. பி. ஐ. வழக்கறிஞர் ராஜமாணிக்கம் எழுந்து கடுமையாக ஆட்சேபித்தார். வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜூக்களின் அடிப்படையில் தான் வக்கீல் வாதிடவேண்டும் என கூறினார்.

உடனே ராம்தாஸ் அவருக்கு பதில்கேள்வி எழுப்பினார். 'வழக்கை தாக்கல் செய்யும் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடின் கொலையைக்கூட மேற்கோள்காட்டினீர்களே? எந்த தஸ்தாவேஜூக்களின் அடிப்படையில் நீங்கள் அதைக் குறிப்பிட்டீர்கள்?' என்று ராம்தாஸ் கேட்டதும் மன்றில் இருந்த கைதிகள் கைதட்டினர்.

இதனால் கோபமடைந்த ராஜமாணிக்கம் 'நீங்கள் கைதட்டலுக்காக வாதாடுகிறீர்களா? இது விடுதலைகோரும் மனுக்கள் பற்றிய விசாரணை முறையில்லாததைப் பேசி விசாரணைக்கு இடையூறு செய்யக்கூடாது என்று தெரிவித்தார்.

# அ.தி.மு.க. அரசை கலைக்குமாறு கோரவில்லை

-ஆலடி அருணா

(சென்னை)

செல்வி ஜெயலலிதாவின் அரசை அகற்றுவது பற்றி தி. மு. க. சார்பில் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடன்தான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று அக்கட்சியின் பேச்சாளர் ஆலடி அருணா தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக இந்திரா காங்கிரஸ் தலைவர்களைத் தான் டில்லியில் சந்தித்துப் பேசியதாக. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருப்பது அடிப்படையற்ற பொய்ப் பிரசாரம் என்று அவர் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

# சில மாகாணங்களில் திடீர்த் தேர்தல்

## கட்சிகள் ஆயத்தம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றில் திடீர் தேர்தல் ஒன்று வரக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும், இதற்கு தமது கட்சி உறுப்பினர்களை தயாராக இருக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி, மற்றும் சுதந்திரக்கட்சி தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய கூட்டணி தமது அங்கத்தவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

மேலும் இத் தேர்தல் தொடர்பாக புதிய அங்கத்தவர்களையும் அமைப்பாளர்களையும் கட்சி கிளைகளை நிறுவும்படி இக் கட்சிகள் வேண்டுகோள் விடுத்திருப்பதாக "லங்கா தீப" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# கோயில்வயல் பாடசாலை முகமாலைக்கு இடமாற்றம்

(தென்மராட்சி)

கோயில்வயல் அ.த.க. பாடசாலை தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இயக்கச்சி கோயில்வயல் பகுதிகளில் இப்பாடசாலைகளில் சிறிலங்காஇராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதால் அவ்வூர் மக்கள்இடம்பெயர்ந்து தற்போது முகமாலை சமுத்திரன் குடியேற்றத்திட்டத்தில் குடியமர்ந்துள்ளமையால் அங்கு கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பாடசாலை இல்லாமையால் தற்போது முகமாலை சமுத்திரன் குடியேற்றத்திட்டத்தில் புதிதாக ஒரு கொட்டகை அமைத்து கடந்த 21ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

இப் பாடசாலையில் முன்பு கல்வி போதித்த ஆசிரியர்களே தற்போதும் கல்வியை போதித்து வருகின்றார்கள். இத் திறப்பு விழாவுக்கு விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள், இராமசேவை அலுவலர்கள், உதவி அரச அதிபர்கள் கலந்துகொண்டனர்.(86)

# அம்புலன்ஸ் வண்டி பழுது

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸா காலமாகி எட்டாம் நாள் அவரின் மனைவி ஹேமா பிரேமதாஸா கொழும்பு இந்து ஆலயம் ஒன்றில் பிரவேசிக்க அனுமதிக்கப் பட்டது குறித்து குமார் பொன்னம்பலம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இந்துக்கள் வீட்டில் மரணம் சம்பவித்தால் உறவினர்கள் 31 நாள்களுக்கு ஆலயத்துக்குள் சென்று வழிபட அனுமதிக்கப் படுவதில்லை. வழக்கம் இவ்வாறிருக்க ஹேமா ஆலயத்துக்குள் சென்று வழிபட எவ்வாறு அனுமதிக்கப் பட்டார் என்று குமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

---

## தவறி விட்டது

புலோப்பளை படகு சேவை இறங்கு துறையிலிருந்து நேற்று ஒரு கடதாசிப்பெட்டி தவறிவிட்டது. அதில் இஞ்சினியரிங் புத்தகங்களும், வீட்டுப் பொருள்களும் மருந்து வகைகளும் உள்ளன கண்டெடுத்தவர்கள் கீழ்கண்டவிலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்

இ. ஞானசிங்கம்
யூறோவீல் ஸ்தாபனம்,
449, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[5944]

---

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் நாகராஜா

கலைஞரும், சேவையாளரும், பிரபல சோதிடரும் யாழ் ஈச்சமோட்டையைவசிப்பிடமாகக்கொண்ட சு நாகராஜா காலமானார் இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நொறிஸ் (தமிழீழ காவல்துறை), மதி,ரதி ராஜா, ஜிம்கலின், புருஸ்லி ஆகியோரின் அன்புத் தந்தையும், நிக்சனின் அன்பு மாமனாருமாவார் அன்னாரின் பூதவுடல் அன்னாரது இல்லத்தில் இருந்து 11-07-93 (இன்று) பி ப. 2-30 மணிக்கு யாழ். பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

தகவல்:
நா. நொறிஸ்
(மகன்)

19/6 கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ் நகர்.

[5338]

---

## திருமதி அமிர்தம் ராசாத்தி

குருநகரைச் சேர்ந்த திருமதி அமிர்தம் ராசாத்தி 10-07-93 நேற்று காலமானார். அன்னார் அதிகாரம் அமிர்தத்தின் அன்பு மனைவியும், செபமாலை, சேகர், யோண்சன், வின்சன் (இந்தியா), அமலன் (அமலன் ஸ்ரோர்ஸ்), சுரேஷ், தனேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல்11-07-93 இன்று பிற்பகல் 3-00 மணியளவில் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
அமலன் ஸ்ரோர்ஸ்
(மகன்)
ஐந்துமாடி,
குருநகர்.

குருநகர்,
அண்ணா, எம் ஜி.ஆர். சிலை
முன்பாக

[5339]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

பொறுப்பாளர் திரு.பா. பைந்தமிழன். பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (யோ)

## புத்தக கண்காட்சி

[வடமராட்சி]

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடாத்தும் 8ஆவது ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த ''புத்தகக் கண்காட்சி'' எதிர்வரும் வெள்ளிக்கிழமை 16ஆந் திகதி காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலையில் கலாசாலை அதிபர் திரு ஆர். எஸ் நடராசா இக் கண்காட்சியை திறந்து வைப்பார்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்வினையடுத்து ஏற்பாடு செய்யப்பட்ட இக் கண்காட்சியில் பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைப்பர். (யோ)

## திருட்டு

(குருநகர்)

தலையணைக்குக் கீழே வீட்டுக்காரர் வைத்துப் படுத்திருந்த சாவியை எடுத்து திருட்டு நடத்தப்பட்ட சம்பவம் ஒன்று சமீபத்தில் வண்ணார் பண்ணையில் நடைபெற்றுள்ளது.

வண்ணார்பண்ணை மேற்கு நாவலடி வீதி வீடொன்றில் நடைபெற்ற திருட்டில் நித்திரையில் இருந்த குழந்தையின் காப்பு மற்றும் நகைத்தொழில் செய்யும் மேசை போன்ற பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டிருப்பதாக காவல்துறைப் பணிமனையில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. (21)

### சாந்தனின் இன்னிசை நிகழ்ச்சி

சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர்கோவில் அலங்கார உற்சவ ஐந்தாவது நாளான இன்று சாந்தன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

---

சம்பளம்

டுள்ளதால் இதற்கிணங்க யாழ். கல்விப் பணிப்பாளர் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில இச்சம்பள அதிகரிப்பை இம்மாதச் சம்பளத்துடன் வழங்கவேண்டாமெனக் கேட்டுள்ளார். (17)

---

(டோக்கியோ)

'பயங்கரவாதத்துக்கு' ஆதரவளிக்கும் நாடுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று டோக்கியோவில் நடைபெறும் ஏழு தொழில் வள நாடுகளின் உச்சி மாநாடு எச்சரித்துள்ளது.

டோக்கியோவில் நேற்று நடந்த உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்று இவ்வாறு கூறுகிறது.

அரசின் ஆதரவில் நடைபெறும் பயங்கரவாத செயல்கள் பெருத்த அபாயத்தைத் தோற்றுவிப்பதாக உச்சிமாநாடு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. உலகெங்கிலும் அரச ஆதரவில் நடைபெறும் பயங்கரவாதத்தால் பெருகிவரும் அபாயம் குறித்தும், சர்வதேச மட்டத்திலான அதன்தொடர்புகள் பற்றியும் உச்சி மாநாட்டுத் தலைவர்கள் ஆலோசித்ததாய் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கல்விக் கருத்தரங்கு

1993 ஆவணியில் நடைபெறவிருக்கும் க.பொ.த உயர்தர பரீட்சையில் கிறிஸ்தவத்தை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்யும் வகையில் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை மறைக்கல்வி நடுநிலையத்தில் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தால ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இக்கருத்தரங்கை யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை பிரிவு விரிவுரையாளர். கலாநிதி அருட் திரு. ஏ ஜே. வி. சந்திரகாந்தன் நடாத்தவுள்ளார்.

---

யுத்தக்

லையென கூறியிருப்பதைத் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது மேலும் யுத்தக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்போவதாக அறிவித்தமை அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் போர்க்கைதிகளின் விவகாரம் அரசாங்க மட்டத்தில் தீவிர பரிசீலனைக்கு உள்ளாகியுள்ளதாகவும், இவ் விவகாரம் அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத் தீவிரப் பரிசீலனையின் பின்னர் உடன்பாட்டில் குறிப்பிட்ட எரிபொருள் உரவகை போன்ற முக்கிய சில வகைப் பொருள்களை தவிர ஏனையவற்றை அனுப்புவதன் மூலம் கைதிகள் விடுதலைக்கு முயற்சிகள் மேற்கொள்ள முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இம் முடிவு இராணுவத்தையும் திருப்திப் படுத்தும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

---

### ஐ.தே க.விற்கு செல்ல நெவில் முயற்சி

சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. நெவில் பெனாண்டோ தனது பழைய கட்சியான ஐ தே. கட்சிக்கு மீண்டும் செல்வதற்கு முயற்சித்து வருகிறார்.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாகவே கட்சி மாறும் சட் திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் கபடநாடகத்தை முன்நின்று நடத்திவருவதாக சிறிமாவோ பண்டாரநாயக்கா அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். டி. திலகநாயக்கா தெரிவித்துள்ளார்.

---

பொலிஸ்

உள்ளது.

★ விவசாய சேவைகளையும் மத்திய அரசு தனதாக்கியுள்ளது.

★ மாகாண சபைகளின் வருமானமும் மத்திய அரசின் கணக்கில் வைக்கப்படவேண்டும். மாகாண அரசுகள் தமது பணத் தேவைகளுக்கு மத்திய அரசை எதிர்பார்க்கவேண்டியுள்ளது.

★ பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதிகாரப்பரவலாக்கம் நடைமுறையில் இல்லாத காரணத்தால் மக்களின்அபிலாசைகளை ஓரளவுதான் மாகாண சபைகளினால் திருப்திப்படுத்த முடியும்.

மத்திய அரசின் பணிகளை மாத்திரம் தான் செலவுச் சுருக்கமாகவும், ஊழல் இன்றியும் மாகாண அரசுகளால் நடைமுறைப்படுத்தமுடியும் மேலும் மக்கள் ஒத்துழைப்புக் குழுக்களின் உதவியுடன் நிர்வாகத்தைப் பலப்படுத்த முடியும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

---

நிவாரணத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது.

168 ரூபா பெறுமதியான உலர் உணவு பெறுபவருக்கு 2 ரூபா 60 சதம் வெட்டு. 630 ரூபா பெறுதியான உலர் உணவு விநியோகத்திகு 2 ரூபா 20 சதம் வெட்டு. 504 ரூபா பெறுமதியான உலர் உணவு விநியோகத்துக்கு 4 ரூபா 80 சதம் வெட்டு. 420 ரூபா பெறுமதிக்கு 2 ரூபா 04 சதம் வெட்டு. என்றும் அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி யாழ். அரசாங்க அதிபரை இடம்பெயர்ந்த மக்கள் கேட்டுள்ளனர். (தி)

---

அங்கத்தவர்களுக்கு வேண்டு ... ளது.

# கோயில்வயல் பாடசாலை முகமாலைக்கு இடமாற்றம்

(தென்மராட்சி)

கோயில்வயல் அ.த.க. பாடசாலை தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இயக்கச்சி கோயில்வயல் பகுதிகளில் இப்பாடசாலைகளில் சிறிலங்காஇராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதால் அவ்வூர் மக்கள்இடம்பெயர்ந்து தற்போது முகமாலை சமுத்திரன் குடியேற்றத்திட்டத்தில் குடியமர்ந்துள்ளமையால் அந்த கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பாடசாலை இல்லாமையால் தற்போது முகமாலை சமுத்திரன் குடியேற்றத்திட்டத்தில் புதிதாக ஒரு கொட்டகை அமைத்து கடந்த 21ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

இப் பாடசாலையில் முன்பு கல்வி போதித்த ஆசிரியர்களே தற்போதும் கல்வியை போதித்து வருகின்றார்கள். இத் திறப்பு விழாவுக்கு விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள், கிராமசேவை அலுவலர்கள், உதவி அரச அதிபர்கள் கலந்துகொண்டனர்.(86)

## அம்புலன்ஸ் வண்டி பழுது நோயாளர் அவதி

பளை வைத்தியசாலையில் இருந்து அவசர நோயாளர்களை யாழ். போதனாவைத்திய சாலைக்கு கொண்டுவருவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பளை வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் வண்டி ஒன்று இருந்த போதும் சில மாதங்களாக பழுதடைந்த நிலையில் இயங்க முடியாது மரநிழலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையே நோயாளர் இவ்வாறு அவதியுறுவதற்குக் காரணமாகும். )86)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 10-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10280

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-7041, 41-9696, 41-8096, 27-1122, 41-4194
24-1172, 24-9676, 42-9326, 42-1623, 26-5777
26-5244, 41-9487, 24-7941.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
இல்லை

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
12-01-1929

இறப்பு:
21-07-1992

திதி:
10-07-1993



அமரர்

## திரு.ஐயாத்துரைசிற்றம்பலம்

[நியூ சரோஜா நகை மாளிகை உரிமையாளர்
நியூ மார்க்கட் சாவகச்சேரி]

சங்கத்தானை,
சாவகச்சேரி,

மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், உற்றார்,
உறவினர்.

[5055]